**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**
**O.S.No.374/2022**

18.08.2026 வா.சா.1 திரு. மணி

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சொந்த ஊர் மணப்படை வீடு என்றால் சரிதான். எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் எந்தவிதமான வாடகை ஒப்பந்தமும் இல்லை என்றால் எனக்கும் அவருக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. வாடகை ஒப்பந்தமும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 17.06.2003 அன்று 2 மாத வாடகை அட்வான்ஸ் ரூபாய் 1400, மாத வாடகை ரூபாண் 700 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.
2. நான் எந்தவித வாடகையும் 2ம் பிரதிவாதி வசம் கொடுத்து வாங்கவில்லை என்றால் 2ம் பிரதிவாதியின் கணக்குப்பிள்ளை பாண்டி என்பவர் தான் வாடகையை 2022, ஆகஸ்ட் மாதம் வரை வாடகையை வாங்கி சென்றார். நான் வாடகையை கொடுத்ததற்கு ஏதாவது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நேரடியாக வந்து செல்வார்.
3. 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் நான் தான் வாடகையை செலுத்தி வருகிறேன் என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். நான் அதற்கான இரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்திலோ 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் வாடகை வாங்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் யார் யாரிடம் எவ்வளவு வாடகை வாங்கினேன் என்ற விபரம் எனது கைவசம் உள்ளதா என்றால் இல்லை. சிலர்

நேரில் அவரிடமே செலுத்திவிடுவார்கள். என்னிடம் வாடகை கொடுப்பதை நான் அவரிடம் நேரில் கொடுப்பேன்.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்ட காலங்களுக்கு பின்னர் வாடகை செலுத்தியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேன். அதில் விபரம் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 10.04.2005 வரை தான் வாடகை செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குறிப்பிட்ட நாளுக்கு வரவு வைத்தார்கள். 2022 ஆகஸ்ட் மாதம் வரை செலுத்தினேன்.

5. எந்தெந்த தேதியில், எந்தெந்த மாத வாடகையை செலுத்தினேன் என்று பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 10.04.2005 வரையான காலம் வரை இரசீது தந்தார்கள் என்றும் அதற்கு பின்பு 2025 ஆகஸ்ட் வரை இரசீது தரவில்லை என்று பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

6. எனக்கு வழக்கு சொத்தில் வாடகைதாரர் என்ற உரிமையை தவிர வேறு உரிமையை கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் 2ம் பிரதிவாதி என்னிடம் பத்து இலட்சம் வாங்கியிருந்தார். பின்பு அவர் இறந்துவிட்டார். 2ம் பிரதிவாதியின் தகப்பனார் என்னிடம் பத்து இலட்சம் வாங்கியதை காட்டுவதற்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக மட்டும் பேசிக்கொண்டோம். நான் 2ம் பிரதிவாதி தந்தையிடம் கொடுத்த பத்து இலட்சத்தை வசூலிப்பதற்கு வேறு ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. உறவினர் என்பதால் தருகிறேன் என்று மட்டும் சொன்னார்கள்.

7. எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதியின் தந்தையிடம் பத்து இலட்சம் கொடுத்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு தீர்வை செலுத்த சொல்லி 2ம் பிரதிவாதி எனக்கு எந்த விபரத்தையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தீர்வை செலுத்தியுள்ளேன். தீர்வை செலுத்தியது ஒரே நாளில் செலுத்தியுள்ளேனா அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தினேனா என்றால் ஒரே தடவையில் செலுத்தினேன்.

8. நீதிமன்றத்திற்கு ஆவணம் தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக ஒரே தடவை செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆனது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தீர்வை செலுத்தியதற்கான இரசீது ஆகும். தீர்வை செலுத்தியதற்கான ரூபாயை வாடகையில் கழித்து கொள்வதாக எந்தவிதமான அறிவிப்பையும் நான் 2ம் பிரதிவாதிக்கு சொல்லவில்லை என்றால் சரிதான். நானே செலவழித்துக்கொள்வேன்.

9. வா.சா.ஆ.3 தவிர வேறு எந்த தீர்வை இரசீதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் வாடகையை நேரிலோ, அல்லது வேறு வகையிலோ 2ம் பிரதிவாதியிடம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. தபால் மூலம் அனுப்பினேன் அவர் திருப்பி அனுப்பிவிட்டார். நான் தபாலில் வாடகை பணத்தை அனுப்பியதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எத்தனையாவது ஆவணம் என்று எனக்கு தெரியவில்லை.

10. நான் இந்த வழக்கை 25.08.2022ம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றும் மேற்படி தேதியில் இருந்து தற்போது வரை நீதிமன்றத்தில் வாடகையை வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால்

எந்தவித மனுவும் வாடகை பணத்தை கேட்டு தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் வைப்பீடு செய்யவில்லை.

11. 2ம் பிரதிவாதியின் பவர் ஏஜெண்ட் என்ற நிலைமையில் 1ம் பிரதிவாதி என்னை தபசில் சொத்தில் இருந்து காலி செய்ய சொல்லி அ.வ.எண்.89/2023 ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலோ வாடகையை வைப்பீடு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் வாடகையை கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து இன்றைய தேதி வரை வாடகை செலுத்தவில்லை என்றால் சரிதான்.

12. வழக்கு சொத்தானது சுமார் 60 வருடங்களுக்கு முந்தைய கட்டிடம் என்றால் 30 வருடங்கள் ஆகிவிட்டது. கட்டிடமானது பழமையான கட்டிடம் என்பதால் 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணம் கொடுத்து அதனை இடித்து புதிதாக கட்டிடம் கட்ட முயற்சி செய்தார் என்றும் நான் அவர்களை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்றும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

13. நான் ம.தி.மு.க கட்சியில் மாவட்ட பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். எனது மகளை காவல்துறையில் உள்ள உயர் அதிகாரிக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றும் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி மற்றும் சிலர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உதவினேன் என்றால் சரியல்ல. எனது மகளை ஒரு மாதத்திற்கு முன்பு தான் திருமணம் செய்து கொடுத்தேன். எனது மகளை ஒரு

மாதத்திற்கு முன்பு திருமணம் முடிந்ததை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. 1, 2 பிரதிவாதிகள் எந்த காலத்திலும் என்னை சட்ட விரோதமாக காலி செய்ய முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜேசிபி யை கொண்டு வந்து வீட்டு காம்பவுண்ட் சுவரை இடித்தார். ஜேசிபி கொண்டு வந்து இடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னை சட்டத்திற்கு உட்பட்டு காலி செய்ய சொன்னதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பொய்யான காரணத்தை சொல்லி தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 18.08.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.08.18 17:33:38 +0530

**1 வது கூடுதல் மாவட்ட**
**உரிமையியல் நீதிபதி**
**திருநெல்வேலி**